www.tamilarangam.net

Liberation Tigers of TAMIL EELAM

# தமிழீழ விடுதலைப் புலிகள்
# Liberation Tigers of Tamil Eelam

(UK Branch) (பிரித்தானியக் கிளை)

000019

24.5.1986

கடந்த 17ம் திகதி சனிக்கிழமை யாழ்நகரில் சிங்கள அரச கூலிப்படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சண்டை ஆரம்பித்து எட்டாவது நாளாக இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த யுத்தத்தில் 100க்கும் அதிகமான கூலிப்படை ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளில் 10 கெரில்லாப் போராளிகளும் வீர மரணம் அடைந்துள்ளனர். இதுவரை 8ப பொதுமக்கள் இறந்துள்ளனர். சுமார் 150க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிங்கள ராணுவத்தினரின் நடவடிக்கைகள் முற்றாக வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டுள்ளன. ராணுவ தளங்களைவிட்டு வெளியேற முடியாத நிலையிலுள்ள ராணுவத்தினர் ராணுவ தளங்களிலிருந்து அப்பாவித் தமிழர்கள் இருக்கும் குடியிருப்புக்கள்மீது ராக்கட் குண்டு வீச்சுக்களையும், மோட்டார் குண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இன்றைய நிலையில் பெருமளவு பொதுமக்களையும் அவர்களது குடியிருப்புகளையும் அழித்து தமிழீழ மக்கள் மத்தியில் பீதியையும், அச்சத்தையும் ஏற்படுத்துவதில் விமானப்படை குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. இந்நடவடிக்கையில் சுமார் 6 இத்தாலிய தயாரிப்பு குண்டு வீச்சு விமானங்களும் 4ஹெலிக்கொப்டர்களும், 2பெல் ரக விமானங்களும் ஈடுபட்டு வருகின்றன: கடந்த எட்டு நாட்களுக்குள் யாழ்குடாநாட்டுப் பிரதேசத்தில் 250 க்கும் மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டுள்ளன. முக்கியமாக யாழ்ப்பாண நகரம், வல்வெட்டித்துறை மற்றும் குடாநாட்டின் கிழக்குக் கரையோரமான செம்பியன் பற்று ஆகிய பிரதேசங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏராளமான குடியிருப்புகளும், யாழ். வைத்தியசாலையின் ஓர் பகுதி உள்ளூர் பத்திரிகையான ஈழநாடு காரியாலயம், பல வர்த்தக ஸ்தாபனங்கள் என்பனவும் இக்குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளால் வல்வெட்டித்துறைக் கரையில் 3கடற்படைப் படகுகள் தாக்கி அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து கரையிலிருந்து 2மைல்களுக்கு அப்பால் தரித்து வைக்கப்பட்டிருக்கும் கடற்படைக் கப்பல்களிலிருந்து கரையோரக் கிராமங்களை நோக்கி பீரங்கித் தாக்குதலும், ராக்கெட் குண்டு வீச்சுக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, காங்கேசன்துறை, நாவற்குழி, தொண்டமானாறு, ஆகிய ராணுவ முகாம்களிலிருந்து வெளியேறிய ராணுவத்தினரை மிகவும் சுலபமாக விரட்டியடித்த விடுதலைப் புலிகள் அவர்களை வெளியேற முடியாதவாறு செய்துள்ளனர். ஆனையிறவு, பலாலி, கோட்டை, ஊர்காவற்துறை ஆகிய முகாம்களிலேயே விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள ராணுவத்தினருக்குமிடையே உக்கிரமான சண்டை நடைபெற்றுள்ளது. இதுவரை எந்த முகாம்களிலிருந்தும் ராணுவத்தினர் வெளியேறவில்லை. யாழ் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. இறுதியாக கிடைத்த தகவலின்படி யாழ். கோட்டை முகாமிலிருந்து வெளியேற முயன்ற ராணுவத்தினர்மீது விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் ஒன்றை தொடுத்துள்ளனர். வசாவிளான் மகா வித்தியாலத்தில் உள்ள தற்காலிக ராணுவ முகாம் மீதும் தாக்குதல் மேற்கொண்டவண்ணமுள்ளனர். இத்தாக்குதலில் ஏராளமான ராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ். குடாநாட்டில் வீதிகள்தோறும் பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் ஆயுதங்கள் சகிதம் ரோந்து புரிந்து கொண்டிருக்கின்றனர். உணவுப் பொருட்களுக்கு ஓரளவு தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையிலும் மக்கள் விடுதலைப் புலிகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி வருவதுடன் புலிகளுக்கும் ராணுவத்தினருக்கும் இடையிலான யுத்தத்தில் புலிகளுடன் தம்மை இணைத்துக் கொண்டுள்ளனர். யாழ் குடாநாட்டிலுள்ள யுத்தத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களினால் தம்மையும் இணைத்துள்ள தம்பாப்பிள்ளை மகேஸ்வரனின் சிறுகுழுவைத்தவிர இதுவரை எந்த அமைப்புகளும் சண்டையில் ஈடுபடவில்லை. இதுவே இன்று யாழ் குடாநாட்டிலுள்ள நிலைமையாகும். ஆனால் இத்தாக்குதல் சம்பவங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்ற சில அமைப்புகள் தமிழகத்திலும் வெளிநாடுகளிலும் தாமே சிங்கள ராணுவத்தினருடன் மோதுவதாக பொய்ப் பிரச்சாரம் செய்து வருகின்றனர். தமிழீழத்தில் தடைசெய்யப்பட்டுள்ள செயற்பாடற்ற TELO இயக்கத்தின் தமிழகத்தில் உள்ளவர்களும் வேறு சில செய்தி ஸ்தாபன தொடர்பு நிலையங்களும் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"